ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2281/16 - 2022 මැයි මස 25 වැනි බදාදා - 2022.05.25

2281/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DSM/YT/LAND/5/74.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/18/2019/WS/164.

பாரிய மாத்தளை நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் யட்டவத்த பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்றை எடுத்துக் கொள்வதற்கு 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் அமைந்துள்ள காணித்துண்டை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கு எண்ணியிருப்பதாக, இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தின், மாத்தளை மாவட்டத்தில், யட்டவத்த பிரதேச செயலாளர் பிரிவில், அஸ்கிரி பல்லேசிய பத்துவ (பற்று) சிறிய பிரிவின் மெதியாபொல கிராம அலுவலர் பிரிவில், நிகொல்ல கிராமத்திலமைந்த, நில அளவையாளர் நாயகத்தின் ஆரம்ப வரைபட இல. மா 1853 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஹுனுவெல கும்புர என அழைக்கப்படும் நிசருபெல எனும் பெயருடைய காணியின் முழு அளவில் சுமார் 0.0388 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித் துண்டின் விபரங்கள் :

01. துண்டு இல. 01

காணியின் பெயர் : ஹுனுவெலகும்புர என அழைக்கப்படும் நிசரு பெல; விபரம் : பாரிய மாத்தளை நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் யட்டவத்த பம்பிக்கும் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்றை எடுத்துக் கொள்வதற்காக; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : திரு. சமுன்கே மொஹொமட் லாஹீர், இல. 21/1, பமுனுதெனிய, யடவத்த; விஸ்தீரணம் : 0.0388 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022.08.22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு யட்டவத்த பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022.08.01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி. ஆர். கே. ஹென்நாயக்க,
பிரதேச செயலாளர்,
யட்டவத்த.

பிரதேச செயலகம்,
யட்டவத்த,
2022, மே 17.

EOG 05 - 0109

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KDS/AKU/4/2/1/58.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2015/WS/46.

மேற்படி தலைப்பின் கீழ் 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிய 2268/79 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் இல. EOG 02 - 0650 இன் கீழ் என்னால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களை நீக்கி, அதற்குப் பகரமாக வேறு திகதிகள் மற்றும் நேரங்களை மாற்றி அமைத்து அவ் அறிவித்தல் கீழ் வருமாறு திருத்தப்படுகிறது என இத்தால் அறிவிக்கின்றேன்.

| **நீக்கப்பட வேண்டிய திகதிகள் மற்றும் நேரங்கள்** | **மாற்றியமைக்கப்பட வேண்டிய திகதிகள் மற்றும் நேரங்கள்** |
|---|---|
| 2022, ஏப்பிறல் 07ஆந் திகதி மு.ப. 10.00 | 2022, யூலை 27 ஆந் திகதி மு.ப. 10.00 |
| 2022, மாச்சு 31 ஆந் திகதி | 2022, யூலை 20 ஆந் திகதி |

ஏ. எச். எம். இந்திகா குமாரி,
பிரதேச செயலாளர்,
அக்குரணை.

பிரதேச செயலகம்,
அக்குரணை,
2022, மே 19.

EOG 03 - 0110